# வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
## காயல்பட்டணம்
## உமறுப்புலவர் முத்தமிழ் மன்றம்
## முத்தமிழ் விழா 01.04.2022

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்,தமிழ்த்துறை முத்தமிழ் மன்றத்தின் சார்பாக 31.03.2022, 01.04.2022 ஆகிய தினங்களில் முத்தமிழ் விழா நடைபெற்றது. 31.03.2022அன்று தமிழ்த்துறை மாணவிகள் இலக்கிய கண்காட்சி, கோலப்போட்டி ஆகியவற்றை நிகழ்த்தினர்.

01.04.2022 அன்று நடனப்போட்டி, இலக்கிய மாந்தரைக்காட்சிபடுத்துதல், பாட்டுபோட்டி, நாடகப்போட்டி ஆகிய போட்டிகள் நடைபெற்றன. 01.04.2022 அன்று 2.00 மணியளவில் முத்தமிழ் மன்ற நிறைவு விழா நடைபெற்றது. இளங்கலை இரண்டாமாண்டு மாணவி மு.ச. தௌபிகா பீவி கிராத் ஓத தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது.

முதுகலை முதலாமாண்டு மாணவி சு. மித்ரா வரவேற்புரை நல்கினார். சிறப்பு விருந்தினராக காமராஜ் கல்லூரியை சார்ந்த தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் மா. முரளி M.A., M.Phil., Ph.D. கலந்து கொண்டு “கனவுகள் மெய்படும்” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. மன்ற செயலரான மூன்றாமாண்டு தமிழிலக்கிய மாணவி ப. சுதா நன்றியுரை கூற இளங்கலை இரண்டாமாண்டு தமிழிலக்கிய மாணவி இ. ஜீனத் நிஸா துஆ ஓத நாட்டு பண்ணுடன் விழா நிறைவுற்றது.